# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

**<u>ஆணை நாள். 08.07.2026</u>**

**<u>முன்னிலை</u>**

**திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**<u>வழக்கு எண். CP 3647/F/2023</u>**

| | | |
|---|---|---|
| திரு.எம்.செங்குட்டுவன் | .. | மேல்முறையீட்டாளர் |
| | /எதிர்/ | |
| பொதுத்தகவல் அலுவலர் / அரசு சார்புச் செயலாளர், நிதி (ஓ.கு.தீ)த் துறை, தலைமைச் செயலகம், சென்னை-09. | .. | பொது அதிகார அமைப்பு |

**<u>ஆணை</u>**

இவ்வாணையத்தில் இன்று 08.07.2026 நடைபெற்ற விசாரணைக்கு மனுதாரர் திரு.எம்.செங்குட்டுவன் அவர்கள் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக, பொதுத்தகவல் அலுவலர் திரு.து.பெரியதுரை, அரசு சார்புச் செயலாளர், நிதித்துறை, தலைமைச் செயலகம், சென்னை-09 அவர்கள் ஆஜரானார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

2. மனுதாரர் 11.11.2022 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் கடந்த 28.05.2022ம் தேதி அனுப்பிய உரிமை மனு மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது அதற்கான நகல்கள் போன்றவற்றை தகவல்களாகக் கோரியுள்ளார்.

3. அம்மனுவை பெற்ற பொதுத்தகவல் அலுவலர் 29.11.2022 நாளிட்ட கடிதம் மூலம் தகவல் வழங்கியுள்ளார். மனுதாரர் தனக்கு சரியான தகவல் வழங்கவில்லை என தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005, சட்டப்பிரிவு 18(1)ன் கீழ் 04.10.2023 நாளிட்ட புகார் மனுவினை ஆணையத்திற்கு தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் தாக்கல் செய்துள்ள புகார் மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு (08.07.2026) இன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத்தகவல் அலுவலர், மனுதாரரின் 11.11.2022 நாளிட்ட மனுவிற்கு 29.11.2022 மற்றும் 15.12.2022

நாளிட்ட கடிதங்கள் வழியாக தகவல் வழங்கியுள்ளதாக கூறி அதற்கான ஆவணங்களை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். மேலும் மனுதாரருக்கு ஆணையத்தின் முன் நேரடியாக தகவல்களை வழங்கினார். மனுதாரர் தகவலைப் பெற்றுக்கொண்டதாகவும் தனது மனுவின் மீது மேல் நடவடிக்கை தேவையில்லை எனவும் ஆணையத்தின் முன் கூறினார்.

5. ஆணையத்தின் முன் உள்ள ஆவணங்களை பரிசீலனை செய்கையில் பொதுத்தகவல் அலுவலரால் வழங்கப்பட்ட தகவல்களை உறுதி செய்தும் மற்றும் மனுதாரர் மேல் நடவடிக்கை தேவையில்லை என தெரிவித்ததையும் கருத்தில் கொண்டும் இவ்வாணையம் இப்புகார் மனுவின் மீதான விசாரணையை முற்றாக்கம் செய்து உத்தரவிடுகிறது.

**ஒம்/-(அபய் குமார் சிங்)**
**மாநில தகவல் ஆணையர்**
(ஆணையத்தின் ஆணைப்படி)

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். CP 3647/F/2023</u>**
**பெறுநர்**
**<u>பொது அதிகார அமைப்பு</u>**
பொதுத்தகவல் அலுவலர் /
அரசு சார்புச் செயலாளர்,
நிதி (ஓ.கு.தீ)த் துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை-09.

**<u>மனுதாரர்</u>**
திரு.எம்.செங்குட்டுவன்,
9, மணியகாரார் இல்லம்,
சங்கரன்பிள்ளைகாலனி,
பாலாம்பாள்புரம் தெற்கு,
கரூர் வட்டம்,
கரூர்-639001.

Copy to file: KR/PA